விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 344 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை (28.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# கொட்டும் மழைக்கு மத்தியில் மாவீரர்களுக்கு அஞ்சலி

- உயிரிழந்த உறவுகளுக்காக பல்லாயிரக்கணக்கானோர் ஒன்றுதிரள்வு.
- வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் அஞ்சலி நிகழ்வுகள்







04ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர்களுக்கு விஜய் அஞ்சலி

(சென்னை)

தமிழ் தேசியத்திற்காக போராடி வீர மரணமடைந்த மாவீரர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் நினைவுகூர்ந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

தேராவிலில்

## கேணல் விதுஷாவின் தாயாரால் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி

04ஆம் பக்கம் பார்க்க

## முதல் மாவீரர் சங்கர் நினைவாலயம் முன் நினைவேந்தல் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

போரில் உயிர்நீத்த முதல் மாவீரர் சங்கர் நினைவாலயம் முன் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதன்படி யாழ்ப்பாணம் கம்பர்மலைச் சந்தியில் அமைந்துள்ள

04ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தில் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் குறித்த

15ஆம் பக்கம் பார்க்க



# மோசமான வானிலை 47 பேர் உயிரிழப்பு

- 21 பேர் காணாமல் போயுள்ளனர்
- சுமார் 6 ஆயிரம் பேர் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இதுவரை 47 பேர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## நாடு முழுவதும் சிவப்பு எச்சரிக்கை

பலத்த மழையுடன் கடும் காற்று தொடரும்

15ஆம் பக்கம் பார்க்க

சீரற்ற வானிலை

## அரச ஊழியர்களுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச ஊழியர்களுக்கும் இன்று விடுமுறை தினமாக

15ஆம் பக்கம் பார்க்க

## அனர்த்தத்தால் மரணித்த குடும்பங்களுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடு

(கொழும்பு)

அதிக மழையுடன் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதி நிதியத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## இடைநிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை இரண்டு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திக்க லியனகே விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் நிலவும்

15ஆம் பக்கம் பார்க்க

சீரற்ற காலநிலை

## பட்ஜெட் விவாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் பேரிடர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இன்று மற்றும் நாளை பாராளு

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று நாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று நடத்திய சோதனை நடவடிக்கை ளின் போது குறித்த கைது நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஹெரோயினுடன் நான்கு ஆண்களும் கேரளக் கஞ்சாவுடன் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-7,30)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பசுபதி புனிதவதி

திதி : அட்டமி 28.11.2025

தோற்றம் : 04.08.1959

மறைவு : 01.12.2022


அவர்களின் திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 28.11.2025 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவொளி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (6030)

தகவல்:
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 05 . 1936



மறைவு 08 . 12 . 2024

அமரர் செல்லப்பா செல்வராசா

(ஓய்வுநிலை அதிபர், மத்தியஸ்தர் சபை உறுப்பினர், சமாதான நீதவான், கட்டைவேலி ப.நோ.கூ சங்க தலைவர், பனிப்பாளர் கணபதி அறக்கட்டளை நிறுவனம்)

திதி : வளர்பிறை அட்டமி 28.11.2025

அன்பு என்னும் விழுதினை ஆலமரம் போல் ஊன்றி
பண்பு என்னும் கதிர்களை பகலவன் போல் பரப்பி
இல்லறம் என்னும் இன்பத்தை இமை போல் காத்து நின்றவரே...
நீங்கள் பிரிந்து ஒரு வருடம் ஓடிப்போனது இன்னமும் நம்பவே முடியாமல்
நாங்கள் இங்கே தவிக்கின்றோம் அப்பா !
ஓராண்டு கடந்தும் உங்கள் நினைவுகள் எமை
தினமும் வாட்டி வதைக்கின்றது அப்பா
நீங்கள் இல்லாத உலகம் நிம்மதி இழந்து தவிக்க
போகும் பாதைகள் புரியாமல்
நித்தமும் நினைக்கையில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து பாயிது
ஆண்டுகள் பல சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகளும், நிகழ்வுகளும்..
உங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதுத்தோட்டம், அல்வாய் தெற்கு,
அல்வாய். (C-4438)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306 (C-4440)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


## பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான பூங்காவும் அதனுடன் இணைந்த கடையினை 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த குத்தகைக்கும் மற்றும் மந்திகைச் சந்தைக் கடை இலக்கம் - 04 இனை நீண்டகால வாடகைக்கும் வழங்குதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

சபைக்குச் சொந்தமான தம்பசிட்டி சிறுவர் பூங்காவும் அதனுடன் இணைந்த கடை மற்றும் மந்திகைச் சந்தைக் கடை இலக்கம்-04 இனைப் பெறவிரும்புபவர்களி டமிருந்து மீள் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்வி விண்ணப்பம் விநியோகக் காலம் :- 01.12.2025 தொடக்கம் 15.12.2025
கேள்வி மனுக்கள் ஏற்கும் இறுதித் திகதி :- 15:12.2025 மு.ப 10.30 மணி வரை
கேள்வி பத்திரம் திறக்கப்படும் திகதி :- 15.12.2025 மு.ப 11.00மணி

01. கேள்விப் படிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு வெவ்வேறு தபால் உறையில் இடப்பட்டு அதில் மூலப்பிரதி, இணைப்பிரதி மற்றும் கேள்வி விபரம் தெளிவாகக் குறிப்பிட்ட கடித உறையினது இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்படுவதுடன் மூடிய தபால் உறை மீது கையொப்பமிடப்பட்டு படிவங்கள் உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி'** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுவதன் மூலமாகவோ, சமர்ப்பிக்கமுடியும்.
02. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் விண்ணப்பிக்க முடியுமென்பதுடன் தேசிய அடையாள அட்டையை கொண்டு வருவதோடு அதன் நிழற்படப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும்.
03. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
04. கறைநிரற் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்டறியப்படின் அக் கேள்விப்பத்திரம் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பின் தன்னியல்பாக இரத்தாகும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாது விடின் எதுவித அறிவித்தலும் இன்றி விண்ணப்பத்தினை நிராகரிக்க பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. பூங்கா மற்றும் அதனுடன் இணைந்த கடையின் சித்திபெறும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பங்கினை, சபையினால் குறிப்பிடப்படும் திகதிக்குள் செலுத்த வேண்டும்.
08. மந்திகைச் சந்தைக் கடை இலக்கம்-04 இற்கான சித்திபெறும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் முழுத்தொகையினை, சபையினால் குறிப்பிடப்படும் திகதிக்குள் செலுத்த வேண்டும்.

| கடையின் விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|
| தம்பசிட்டி சிறுவர் பூங்காவும் அதனுடன் இணைந்த கடையும் | 162000.00 (ஆண்டுக்கு) | 1,620.00 | 1000.00 | 13500.00 |
| மந்திகைச் சந்தைக் கடை இலக்கம் 04 | 1,080,000.00 | 10,800.00 | 1000.00 | 4500.00 |


அப்பூங்கா மற்றும் அதனுடன் இணைந்த கடை மற்றும் மந்திகைச் சந்தைக் கடை இலக்கம்-04 தொடர்பான மேலதிக விபரங்களை புலோலியிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேடியாகவோ அல்லது 021 226 3276 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளமுடியும்.

**உதயகுமார் யுகதீஸ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பருத்தித்துறை பிரதேசசபை.**

(C-4442) **2025.11.28**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாள் நினைவேந்தல்கள்




சாட்டி துயிலுமில்லம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



நல்லூர்



கோப்பாய்



கனகபுரம் துயிலும் இல்லம்



எல்லாங்குளம் துயிலும் இல்லம்



தேராவில் துயிலும் இல்லம்



வவுனியா – ஈச்சங்குளம்



மன்னார் – ஆட்காட்டிவெளி



மட்டக்களப்பு – மாவடி



திருகோணமலை – ஆலங்குளம்



கிழக்குப் பல்கலைக்கழகம்



கிளிநொச்சி – ஆனந்தபுரம்



பருத்தித்துறை – உடுத்துறை



சென்னை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்களை இரு நாட்களுக்கு மூடுக

## மாநகர முதல்வர் வி.மதிவதனி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையைக் கருத்தில்கொண்டு 2025.11.28 மற்றும் 2025.11.29 ஆகிய இரு தினங்களும் யாழ்ப் பாணம் மாநகர சபை எல்லைக் குள் உள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் மூடு மாறு மாநகர முதல்வர் வி.மதிவ தனி கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குடாநாட்டில் மட்டுமன்றி பிற மாவட்டங்களிலும் தொடரும் சீரற்ற காலநிலை கார ணமாகப் போக்குவரத்துக்களை குறைப்பதே உசிதமானது.

இதன் காரணமாக குறித்த தினங்களில் கற்பித்தல் செயற்பாடு களை நிறுத்தி மாணவர்களின் நலனைக் காக்க தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களை ஒத் துழைக்க கோரியுள்ளார்.

மேலும் மாநகர எல்லைக்குள் அனர்த்தம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள மாநகர சபையும் தயார்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7)

# தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை ஜனாதிபதி தலைமையில் கூடியது

தேசிய அனர்த்த முகாமைத் துவ சபை நேற்று (27) இரவு பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலை மையில் கூடியது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட் டுள்ள அவசரகால அனர்த்த நிலைமையைக் கருத்தில்கொண்டு, எடுக்க வேண்டிய எதிர்கால நட வடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் மக்க ளின் உயிரைப் பாதுகாப்பதற்கும் நிவாரணப் பணிகளைத் தொடர்வ தற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கு மாறு பாதுகாப்புப் படையினருக் கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக் கும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம-7)

## முதல் மாவீரர்...

சங்கரின் நினைவாலயத்தில் மாவீ ரர் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

இதன்போது உயிர்நீத்த மாவீரர் களுக்கு அஞ்சலி செலுத்துவதற் காக பெருந்திரளான மக்கள் ஒன்று திரண்டிருந்தனர். (ம-7)

## கேணல்...

கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நிகழ்வில் இறுதி நாளான நேற்று கேணல் விதுஷாவின் தாயார் பொதுச்சுடர் ஏற்றினார்.

ஏனைய மாவீரர்களின் நினை விடத்தில் மாவீரரின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் அஞ்ச லியைச் செலுத்தினர். (ம-7)

## கொட்டும்...

தமிழ் மக்களின் உரிமைக்காக வும் விடியலுக்காகவும் தாயகக் கன வுடன் சமராடி காவியமான மாவீரர் களை நினைவேந்தும் மாவீரர் நாள் நேற்று வடக்கு, கிழக்கு தமிழர் தாய கம் எங்கும் கொட்டும் மழைக்கும் மத்தியில் பல்லாயிரக்கணக்கா னோர் பங்கேற்புடன் நடைபெற்றது.

அனைத்து துயிலும் இல்லங் களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று மாலை 6.05 மணியள வில் மணிஒலி எழுப்பப்பட்டது. தொடர்ந்து ஒரு நிமிட மௌன வணக்கத்தை அடுத்து 6.07 மணி யளவில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து உயிர் நீத்த முதல் போராளி லெப்.சங்கர் (சத்திய நாதன்) இறந்த நவம்பர் 27ம் திகதியைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் நாளாகப் பிரகடனப் படுத்தினர். ஒவ்வொரு ஆண்டும் இதே திகதியில் மாவீரர் நாள் முன் னெடுக்கப்படுகிறது.

கிளிநொச்சி - கனகபுரம் துயி லும் இல்லத்தில் பொதுச் சுட ரினை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னின் சகோதரரும் மூத்த போராளியு மான மூர்த்தி அவர்கள் ஏற்றி வைத்தார்.

இதனையடுத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு, வீர மரணம் கண்ட மாவீரர்களை கண் ணீரோடு மக்கள் அஞ்சலித்து செலுத்தினர்.

சீரற்ற காலநிலைக்கு மத்தியி லும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலி நிகழ் வில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைகழத் தில் மாவீரர் நினைவொலி எழுப்பப் பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஈழப் போரில் மக்களுக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்கும் மக் களுக்குமாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்படி தனித் தாயகம் கோரிய விடுதலைப் போராட்டத்தில் தன் னுயிர் கொடுத்த வீர மறவர்களை நினைவேந்தி பிரதான சுடர் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு வீரமர ணம் கண்ட மாவீரர்களைக் கண்ணீ ரோடு மக்கள் அஞ்சலி செலுத்தி னர்.

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இடம்பெற் றது.

இந்த மாவீரர் நாள் நினைவேந் தலில் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவி கரன் பங்கேற்றார்.

தொடர்ந்து தமிழர் தாயகமான வடமராட்சி எள்ளங்குளம், கனக புரம், கோப்பாய், சாட்டி, விசுவமடு - தேராவில், நல்லூர், மட்டக்களப்பு - மாவடி, மன்னார் - ஆட்காட்டி வெளி, வவுனியா - ஈச்சங்குளம், திருகோணமலை - சம்பூர், முல் லைத்தீவு - அளம்பில், ஆனந்த புரம், உடுத்துறை, கிழக்குப் பல் கலைக்கழகம், கொடிகாமம், சாவ கச்சேரி, தெல்லிப்பழை, தொண்டை மானாறு, நெடுந்தீவு மற்றும் புலம் பெயர் தேசங்களான நோர்வே, பிரான்ஸ், பிரித்தானியா, அவுஸ்தி ரேலியா மற்றும் தமிழ்நாட்டில் சென் னையிலும் மாவீரர் தின நினை வேந்தல்கள் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

(ம-7,30,33,60,104,250,285,299,316)


# மீள்கேள்வி அறிவித்தல் - 2026

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2026.01.01ஆம் திகதி தொடக்கம் 2026.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம் : 2025.11.28 தொடக்கம் 2025.11.10 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00-பி.ப. 3.00மணி

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும்இறுதித் திகதி : 2025.12.11 மு.ப.10.00 மணி வரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 2025.12.11 மு.ப.10.00 மணி

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (VAT,NBT நீங்கலான) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை 2026 (VAT,NBT நீங்கலான) | மாதாந்த வாடகை (VAT,NBT நீங்கலான) |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | காக்கைதீவு மீன்சந்தை (மேற்கு பகுதி புதிய கட்டடம். வாகன பாதுகாப்பு மற்றும் பொது மலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 9,100.00 | 908,200.00 | - |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 1,400.00 | 137,180.00 | - |
| 3 | சாவல்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,200.00 | 316,800.00 | - |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | | |
| 1 | சாந்தைச் சந்தை | 1,000.00 | 9,000.00 | 899,745.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 1,000.00 | 68,970.00 | 6,897,000.00 | - |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 1,650.00 | 162,830.00 | - |
| 2 | இளவாலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 83,790.00 | 1,300.00 |
| 3 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 4,250.00 | 420,090.00 | - |

கேள்வி நிபந்தனைகள் சம்மந்தமான மேலதிக விபரங்களை 2025.10.24 ந் திகதிய வலம்புரி பத்திரிகையில் பார்வையிடலாம். அத்துடன் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

28.11.2025

(C-4441)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பேருந்து
# 23 பயணிகள் பாதுகாப்பாக மீட்பு

(கொழும்பு)

மொனராகலை - கொழும்பு பிரதான வீதியில் பேருந்து ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பிரதேசவாசிகள் இணைந்து பேருந்தில் இருந்த பயணிகள், பிரதேசவாசிகளின் உதவியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

சுமார் 23 பயணிகள் பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த அனர்த்தத்தின் போது எவருக்கும் எந்த வித காயங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (நி)



# Invitation for Bids (IFB)
## Zonal Education office - Vadamaradchy

(1) The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Zonal Education office-Vadamaradchy now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below

| S. N. | BidNo | Name of the Work | Estimated Civil Cost LKR In Mn With out VAT | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/41/20/04/03/2025/CM/Works/02 | Contraction Retaining Walls Near to Risky Building, J/Nelliady Central College. | 4.938Mn | C8 or above | 74,000.00 | 04.03.2026 | 84 |

[2].Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

[3]. Interested eligible bidders may obtain further information from Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy [Email: acctvada@yahoo.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro.

[4].Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule/ Bidding Data" of the Procurement Document.

[5]. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro from 28.11.2025 until 12.12.2025 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a **non-refundable fee of three thousand Rupees [ Rs 3,000.00 < 10 Mn of Estimated Civil cost]. The method of payment will be by cash.**

[6].Bids must be delivered to the address Chairman, Regional Procurement Committee, Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro on or before **12th December 2025** and **15.30 Hrs**. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7]. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8]. The pre-bid meeting will be held on 05.12.2025 at 10.30 Hrs at the Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro. The address (es) referred to above is (are): Chairman, Regional Procurement Committee, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office-Vadamaradchy,**
**1st Mile Post, Pointpedro.**

(C-4437)

## வெள்ள நீரில் மூழ்கிய கார்
# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை - சாய்ந்தமருது பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். கார் ஒன்று தடம் புரண்டு வெள்ள நீர் நிரம்பிய கால்வாய் ஒன்றில் மூழ்கியதால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.



இதன் போதுஅனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபடும் குழுவினர் சாய்ந்தமருது பிரதேச செயலக அனர்த்த செயலணி பொலிஸார் இணைந்து மேற்கொண்ட மீட்புப் பணியின் போது கால்வாயில் வீழ்ந்த கார் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் மீட்கப்பட்டு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், குறித்த மூவரும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இரண்டாம் ஆண்டு
## நினைவஞ்சலி

கடந்த 20.11.2023 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்.கலாபூசணம்
## இராசையா பீதாம்பரம்
(பற்குணம்)



மலர்ந்த அம்முகத்தில் புன்னகையால்,
கனிவான களிப்பூட்டும் வாய் மொழியால்,
உதவி என்போர்க்கு தேடிவந்து
கைகொடுக்கும் தயவான உள்ளத்தால்,
என்றென்றும் எம் வாழ்வில் ஒளிபரப்பி
இன்பத்தின் விளக்குகளை ஏற்றினீர்கள்!
என்றும் எமைத் தாங்கியும் ஏற்றியும்
ஏணியாய் நின்ற அன்புத் தந்தையே!
ஆண்டுகள் இரண்டு கடந்த போதிலும்
நீங்காத தங்கள் நினைவுகளுடன்..!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்..!

(740)

"சாயி போட்டோ"
1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணியில் கடும் மழை
## வைத்தியசாலை செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

**(வவுனியா)**


**நெடுங்கேணியில் பெய்து வரும் கடும் மழை காரணமாக வைத்தியசாலையில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.**

வவுனியா நெடுங்கேணியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பெய்த கடும் மழை காரணமாக நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வெள்ளப்பாதிப்பால் குறித்த மருத்துவமனையின் சேவைகள் தற்காலிகமாகக் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவசர சேவைகள் மாத்திரம் செயற்பட்டு வருகின்றது.

எனவே ஏனைய சுகாதார சேவைகள் தேவையானவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றமையால் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. (8-250)




கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு வட்டாரத்துக்கு உட்பட்ட மாவீரர் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை வட்டக்கச்சி சந்தையடி பகுதியில் நடைபெற்றது. (படங்கள்:தேவானந்தன்)




சாவகச்சேரி நகர்ப்பகுதியில் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன. (படங்கள்: சுபேசன்)

# புதுக்குடியிருப்பில் மாவீரர் நிகழ்வு



(நெளுக்குளம்)

தமிழீழ தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு, புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் அழைப்பின்படி நேற்று புதுக்குடியிருப்பு நகரமெங்கும் முழுமையான கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டு, மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் த. நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரின் பொது திருவுருவப் படத் திற்கு மலர்மாலை அணிவித்து,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலர் இணைந்து மாவீரர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்தனர். (8-299)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு
## மூடப்பட்டது வர்த்தக நிலையங்கள்







(சாவகச்சேரி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தின் சாவகச்சேரி, கைதடி மற்றும் கொடிகாமம் ஆகியவற்றின் சந்தைகள், இறைச்சிக் கடைகள், மீன்சந்தைகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்றைய தினம் முழுமையாக மூடப்பட்டிருந்தன. (8-33)



முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு றெட்பானாவில் 2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு பின்னர் முதன்முதலாக மாவீரர் பெற்றோர் உரித்துடையோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (படங்கள்: சதீஸ்)

# வீதிக்கு குறுக்கே விழுந்தது புளியமரம்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில், செலான் வங்கியின் முன்பாக உள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வீதியில் நேற்றுக் காலை ஒரு புளியமரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது. இவற்றை விரைந்து அகற்றும் பணியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணி யாளர்கள், பிரதேச சபை பணியாளர்கள், மின்சார சபை பணியாளர்கள் முல்லை த்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுடன் இணைந்து உடனடியாக விழுந்த மரத்தை அகற்றும் பணிகளை மேற்கொண்டனர். மேலும் இலங்கை தொலைத்தொடர்பு வலையமைப்பின் தொலைபேசி கம்ப ங்களும் சேதம் அடைந்துள்ளதுடன் அவற்றையும் விரைந்து மீள் நிலைமைக்குக் கொண்டுவந்தனர். (8-299)

# வடமாகாண பிரதி தொழில் ஆணையாளராக
## திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா நியமனம்

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தின் வட மாகாண பிரதி தொழில் ஆணையாளராக திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண தொழில் அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர் கடந்த ஒக்டோபர் 16 தொடக்கம் யாழ் மாவட்ட உதவி தொழில் ஆணையாளராக



பணியாற்றி நேற்று முன்தினம் வட மாகாண பிரதி தொழில் ஆணையாளராக மாற்றம் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமாத்ரா கரையோரத்தில் நில நடுக்கம்; இலங்கைக்கு பாதிப்பில்லை

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவின் வடக்கு சுமாத்ரா கரையோரத்தில் 6.6 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை 10.26 மணியளவில் குறித்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக இலங்கையின் கரையோரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வசிப்போர் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

எனினும், இலங்கைக்கு ஆழிப் பேரலை எச்சரிக்கை இல்லையென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)


## கிருஸ்ணா அடைவு கடை
### பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2024** ஆம் ஆண்டு **(31.12.2024)** இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு **(31.12.2025)** முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்து கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் **(31.12.2025)** ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: **2024** ஆம் ஆண்டு **டிசம்பர்** மாதம் **31** ஆம் **(2024.12.31)** திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல 370, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311,**
**021 222 5180,**
**077 080 4656**

**உரிமையாளர்,**
**இல, 09 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(6028)


## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2026

பருத்தித்துறை பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்டு புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் **2025.11.28** ஆந் திகதி தொடக்கம் **2025.12.12** ஆந் திகதி மதியம் 02.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை எமது தலைமை அலுவலக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ❖ NVQ Level 5 in Drafting Technology (Building) செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினைச் சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- ❖ மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய கடந்த காலங்களில் பதிவினை மேற்கொண்டவர்கள் பதிவுகளைப் புதிப்பித்தல் கட்டாயமானதாகும்.
- ❖ பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்கள் 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக பருத்தித்துறை பிரதேச சபையில் தொழிற்பட முடியாது.

**குறிப்பு :-**

- ❖ படவரைஞராகப்பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவக் கட்டணம் ரூபா.1,000.00
- ❖ உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராகப்பதிவினை மேற்கொள்ளவதற்கு ரூபா.2,000.00

**உதயகுமார் யுகதீஸ்,**
**தவிசாளர்,**
**பருத்தித்துறை பிரதேச சபை,**
**புலோலி.**
2025.11.28

(C-4436)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
### 134, பிரான்பற்று வீதி, வட்டாரம் - 05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, பிரான்பற்று வீதியிலுள்ள இல 134 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் V.**கிருஷ்ணபகவான்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **சின்னத்தம்பி பூரணசற்குணன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10451/12.03.1975 ஆம் இலக்க உறுதியால் **முருகேசு சின்னத்தம்பி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சின்னதம்பி பூரணசற்குணமும், வேலுப்பிள்ளை டானியேல் ஐயாத்துரையும் பெண் ஞானம்மாவும், வேலுப்பிள்ளை நதானியேல் ஐயாத்துரையும் பெண் பரம்சோதி அம்மாவும், எட்வின் விக்ரர் ஜெயரத்தினசிங்கம், கென்ஸ்மனும் பெண் கிருபையும்** ஆகியவர்கள் இணைந்து மேற்படி முழு ஆதனமானது "1915.09.25 ஆம் திகதி நொத்தாரிஸ் கு.பே.பொன்னம்பலம் முகதாவில் 3479 ஆம் இலக்கத்திலும் 1905.12.23 ஆம் திகதி நொத்தாரிஸ் மு.தா.உ.சதாசிவம் முகதாவில் 1011 ஆம் இலக்கத்திலும், 1975.03.12 ஆம் திகதி நொத்தாரிஸ் மு.க சுப்பிரமணியம் முகதாவில் 10451 ஆம் இலக்கத்திலும் தமது மாமா, சிறியதாயார் பெயருக்கும். தங்களில் முதலாம் பெயருக்கு முடிந்த சீதனம், அறுதி, நன்கொடை உறுதிகளின்படி தங்களில் முதலாம் பெயரின் நன்கொடையும், முதலாம், மூன்றாம், ஐந்தாம், ஏழாம் பெயரின் உரிமையானதும், நெடுங்காலம் தங்கள் மாமனார் காலஞ்சென்ற முருகேசு சின்னத்தம்பியால் முப்பது வருடங்களுக்கு மேல் தடையற்ற ஆட்சியாயுரியதும், தங்கள் ஆட்சியுமானதும்" எனக் குறிப்பிட்டு, பிரசித்த நொத்தாரிஸ் மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12040/11.04.1979 ஆம் இலக்க உறுதியால் **வயித்திலிங்கம் இராசகுலசிங்கம்** ஆகியவருக்கு அறுதியாக விற்றிருந்தார்கள்.

**கந்தசாமி உமாகாந்தன்** ஆகியவர் மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு செ.லலிதாதாஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 529/20.01.2022 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வயித்திலிங்கம் இராசகுலசிங்கமும் பெண் ஞானாம்பிகையும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.


குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"மாலியவத்தை"**
இறை: **சங்கானை கிழக்கு**
வீஸ்தீரணம்: **நில.பர.இலா 2 குளி 7.02.**
எல்லைகள்: **கிழக்கு**-ஒழுங்கை **வடக்கும், மேற்கும்**-மிகுதி ஆதனம் **தெற்கு**-செல்லையா மாஸ்ரர் றோட்டு

குறித்த **கந்தசாமி உமாகாந்தன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கந்தசாமி உமாகாந்தன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(6037)



## திருமுறைச் சிவவேள்விப் பெருவிழா

**பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி**
**நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீர்ஓடி வம்மின்**
**தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்**
**கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே.**

திருவாசகம் - 510

உலக இன்பங்களில் மயங்கிக் கெட்டொழியும் இயல்பான மாந்தரே! உலகப்பற்றுக்களை ஒழித்தவராய், இறைவனைப் பற்றுகின்ற ஆதரவு தன்னைப் பற்றி நல்ல நெறியினை அடைய விரும்பினால் **நீங்கள் ஓடி வாருங்கள்.** நீண்ட சடை உடைய நிலைபெற்றத் திருப்பெருந்துறை பெருமானை எழுந்தருளி இருக்கும் **எம்பெருமானது புகழைக் கற்றும் பாடியும்** அவ்வாறு இறைவன் திருவடியைத் தழுவியும் **அடியாரோடும் சேர்ந்து** அவன் திருவடியை அடைவீர்களாக

**திருமுறைகள் ஓதும் இடம்-சங்குவேலி தெற்கு சைவ மகாசபை வயிரவர் காளி அம்பாள் தேவஸ்தானம்**

பன்னிரு திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ் முற்றோதலும் சிவமூல மந்திரம் உச்சரித்தலும் இரவு பகலாக தொடர்ந்து 21.11.2025 தொடங்கி 04.12.2025 வரையும் ஓதுவதில் கலந்து கொண்டு கற்று ஓதி வண்ணமே நாம் எல்லா நலனும், நாம் துன்பம் நீங்கி துயரம் நீங்கி சகல நலனும் பெற்று உய்வோமாக.

நாமெல்லாம் உய்வடையும் பொருட்டு சிவப்பரம் பொருள் தக்க ஆன்மாக்களை வளிய வந்து ஆட்கொண்டு, அவர்கள் மூலமாக அருளிய பாடல்களை, தமிழ் **வேதங்களை, இன்றும் பக்தியுடன் பாராயணம் செய்வோரும், பக்கம் இருந்து அன்புடன் செவி சாய்ப்போரும்,** மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அம்மையே **சிவலோகம் அடையப் பெறுகிறார்கள்.**

இத் திருமுறைப் பதிகங்களை நாளும் ஓதி உய்வு பெறவேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும். ஆலயங்களிலும் இல்லங்களிலும், உள்ளங்களிலும் இவற்றை ஒலிக்குமாறு செய்வது சிறந்ததொரு சிவப்பணியாகும். அந்தப் பணியை ஆலய நிர்வாகத்தினரும், சைவ சமய பாதுகாப்பு பேரவையும் இது சிவப்பணியில் நாமும் கலந்து எங்கும் நிறைந்துள்ள தில்லைக்கூத்தனை தரிசித்தும், உண்ணாமுளை அண்ணாமலையானை **நினைத்திருந்தும் முத்தி தரும் ஆலயத்தை அருணை** ஒருமுறை சொன்னால் ஐந்தெழுத்தை மூன்று கோடி முறை ஓதிய பயனுண்டு எனவும் ஓதுவோம்.

இங்கு ஓதியவர்க்கு **மூன்று நாயன்மாரது அற்புதப் பதிகம்** ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம் வெளியிட்ட அருள் திருமுறைப் புத்தகம் பாடியவர்களுக்கு சபையினர் பகிர்வார்கள்.

**சகல சைவ மக்களும், தங்களது பிள்ளைகளுடன் சென்று பாடிப்பணிந்து நமது சந்ததியினருக்கு வழிகாட்டி உய்வோம்.**




**க.கு.கு சிவபாலன் K.K.K**
**சிவநெறிப்புரவலர், பாஞ்சசன்யம்**

(C-4435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## 77 அடி உயர ராமர் சிலை திறந்து வைக்கிறார் மோடி




(கோவா)

இந்தியாவின் மிக உயரமான ஸ்ரீ ராமரின் வெண்கல சிலை, கோவாவின் ஸ்ரீ சமஸ்தானம் கோகர்ண பர்கலி ஜீவோட்டம் மடத்தில் இன்று பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார்.

கோவாவின் கனகோனாவில் (தெற்கு கோவா) உள்ள ஸ்ரீ சமஸ்தானம் கோகர்ண பரதகலி ஜீவோட்டம் மடத்தில் நிறுவப்பட்ட ஸ்ரீ ராமரின் 77 அடி வெண்கல சிலை, இன்று புனிதமாக பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

இந்த நிகழ்வில் சுமார் 1.2 இலட்சம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஙி)



# ஹொங்கொங் அடு

# கட்டடங்களி

## ❖ 44 பேர் உயிரிழப்

## ❖ 300 பேர் மாயம்

## ❖ மீட்புப் பணிகள் தீவிர



சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள தீவு நாடான ஹொங்கொங்கின், தை போ மாகாணத்தில் “வாங் புக் கோர்ட்” என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் உள்ளது. இங்கு, தலா 35 மாடிகளுடன் வரிசையாக எட்டு கட்டடங்கள் உள்ளன.


மொத்தம் உள்ள 2,000 வீடுகளில் 4,800 பேர் வசித்து வருகின்றனர்.

இந்தக் குடியிருப்பு வளாகத்தில் புதுப்பிக்கும் பணிகளுக்காக மூங்கில் சாரங்கள் மற்றும் வலைகள் கட்டப்பட்டிருந்தன.

ஒரு கட்டடத்தில் இருந்த மூங்கில் சாரத்தில் நேற்று முன்தினம் மதியம் திடீ

றென
க
கட்ட
பரவி
• ஏ
விட்
சிவ
புகை
த
வாக
வீரர்
கடங்
நேர
இ
வீரர்
அ

## சுறா தாக்கியதில்
## பெண்ணொருவர் உயிரிழப்பு



(கன்பெரா)

அவுஸ்திரேலிய மாநிலமான நியூ சவுத்வேல்ஸில் உள்ள தொலைதூர கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த பெண்ணொருவர் சுறா மீன் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

சுறா தாக்கப்பட்டத்தில் மற்றுமோர் ஆண் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

20 வயதுடைய பெண் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், 20 வயதான மற்றைய நபர் ஆபத்தான நிலையில் நியூ கேஸில் உள்ள மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டதாகவும் உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக் கிழமை அதிகாலை, உள்ளூர் நேரப்படிசிட்னியில் இருந்து சுமார் 300 கி.மீ வடக்கே உள்ள க்ரௌடி பே தேசிய பூங்காவில் உள்ள கைலீஸ் கடற்கரைப் பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஐந்தாவது கொடிய சுறா தாக்குதல் இதுவாகும்.

இதில் மிக அண்மையது மூன்று மாதங்களுக்கு முன்பு, சிட்னியின் வடக்கு கடற்கரைகளில் ஒரு அரிய சுறா தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தமை ஆகும். (ஙி)



## வெள்ளை மாளிகை அ
## தேசிய காவலர்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில், வெள்ளை மாளிகை அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு தேசிய காவலர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் துரிதமாகச் செயற்பட்டு, தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்துள்ளனர்.

தாக்குதலின்போது அந்த நபரும் கடுமையாகக் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடந்தபோது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் அவர் கண்டனத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...க்குமாடி குடியிருப்பு ...ல் தீப்பரவல்!

(விக்டோரியா) ▪▪▪▪▪▪▪▪▪▪▪ ஹொங்காங் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 44 பேர் உயிரிழந்துள்ளதுடன் 300 பேர் காணாமல் போயுள்ளனர்.

...ன தீப்பற்றியது.

...காற்றின் வேகத்தால் அடுத்தடுத்த ...ட்டடங்களுக்கும் தீ மளமளவென ...வியது.

...ஏழு கட்டடங்களில் தீ பரவி கொழுந்து ...ட்டு எரிந்ததால், அந்தப்பகுதியே ...வப்பு நிறமாகக் காட்சியளித்ததுடன் ...கை மண்டலமாக மாறியது.

...தகவல் அறிந்து 128 தீயணைப்பு ...ாகனங்களில், 767 தீயணைப்பு ...ரர்கள் விரைந்து வந்து கட்டுக் ...டங்காமல் எரிந்த தீயை பல மணி ...நரம் போராடி அணைத்தனர்.

இந்த தீ விபத்தில், தீயணைப்பு படை ...ரர் உட்பட 44 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் முதியோர் எனத் தெரிய வந்துள்ளது.



மேலும் 300 பேர் காணாமல் போயுள்ளனர். பலர் பலத்த காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். (நி)

## தாய்போல் வேடமணிந்து 'பென்ஷன்' வாங்கியவர் கைது





(ரோம்)

இத்தாலியில் உயிரிழந்த தாயின் ஓய்வூதியத்தை பெற, பல ஆண்டுகளாக மாறுவேடமிட்டு மோசடியில் ஈடுபட்ட மகனை, பொலிஸார் கைது செய்தனர்.

ஐரோப்பிய நாடான இத்தாலியின் போர்கோ விர்ஜிலியோவைச் சேர்ந்தவர், கிராசியெல்லா டால் ஒக்லியோ. நர்சாகப் பணியாற்றிய இவர், மூன்று ஆண்டுகளுக்கு முன் காலமானார்.

ஆண்டுக்குப் பல இலட்சம் ரூபாய் வரை வரும் அவருடைய ஓய்வூதியத்தை விட்டுத் தர மனமில்லாத அவருடைய 56 வயது மகன், இதற்காக மோசடி செய்யத் துணிந்தார். தாயின் இறப்பை மறைத்து, மூன்று ஆண்டுகளாக அந்த ஓய்வூதியத்தை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், சமீபத்தில் ஓய்வூதிய அடையாள அட்டை காலாவதியாகி உள்ளது.

இதையடுத்து, அதை புதுப்பிக்க வரும்படி, நகராட்சி அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்தது.

இதற்காக, லிப்ஸ்டிக், நெயில் பாலிஷ், பழங்கால காதணிகள், விக் அணிந்து, தாயைப் போலவே வேடமிட்டு அவர் சென்றுள்ளார். தங்களுடைய ஆவணத்தில் உள்ள படத்துடன் ஒப்பிட்டு பார்த்த அதிகாரிகளுக்கு முதலில் சந்தேகம் வரவில்லை.

ஆனால், அவர் நடந்து கொண்ட விதம், அங்கிருந்த சிலருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, பொலிஸுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிஸார் அவரிடம் விசாரித்தபோதுதான், ஓய்வூதியத்திற்காக மாறுவேடமிட்டு வந்ததை ஒப்புக் கொண்டார். தாயின் இறப்பை மறைக்க, உடலை "மம்மி" போன்று பதப்படுத்தி வைத்திருப்பதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, வீட்டின் துணி அலுமாரியில் மறைத்து வைத்திருந்த மூதாட்டியின் உடலை பொலிஸார் கைப்பற்றின.

தாயின் பென்ஷனுக்காக அவரைப் போல் மகன் வேடமிட்ட இந்தச் சம்பவம், அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (நி)

## ...அருகே துப்பாக்கிச்சூடு ...ர்கள் படுகாயம்


பதிவு செய்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய குற்றவாளியை "மிருகம்" என்று குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், "காயமடைந்திருந்தாலும், அந்த மிருகம் மிகப்பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்," என கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புப் படை



வீரர்களை பாராட்டியுள்ள ட்ரம்ப், இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து, பாதுகாப்பை மேலும் பலப்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்துள்ளார். (நி)



## இம்ரான் கான் தொடர்பான வதந்திகளால் பாகிஸ்தானில் சர்ச்சை

(இஸ்லாமாபாத்)

ராவல்பிண்டி சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், காவலில் உயிரிழந்துவிட்டதாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட சமூக ஊடகக் கணக்குகள் உறுதிப்படுத்தப்படாத தகவலை வெளியிட்டுள்ளன.

இது குறித்து ஆப்கான் டைம்ஸ் தனது எக்ஸ் பதிவில், முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ராவல்பிண்டியின் அடியாலா சிறையில் "கொலை செய்யப்பட்டார்" என்ற ஆதாரங்களில் இருந்து தகவல் கிடைத்ததாகக் கூறியதைத் தொடர்ந்து இந்த வதந்திகள் தொடங்கின.

எனினும், இந்தக் கூற்றுகள் அனைத்தும் ஆதாரமற்றவை மற்றும் சரிபார்க்கப்படாதவை எந்த நம்பகமான நிறுவனத்தாலும் அல்லது துறையாலும் உறுதிப்படுத்தப்படவில்லை.



இம்ரான் கானின் குடும்பத்தினர் சிறையில் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை என்றும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் செய்திகள் வெளியான சிறிது நேரத்திலேயே இந்த வதந்திகள் வந்துள்ளன.

அடியாலா சிறைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட அவரது சகோதரிகள், அவரைச் சந்திக்கக் கோரி தாக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

72 வயதான முன்னாள் கிரிக்கெட் வீரர் ஊழல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டு 2023 முதல் சிறையில் உள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பி.யின் துப்பாக்கி பறிமுதல்

(கொழும்பு)

கடந்த நவம்பர் 21ஆம் திகதி நுகேகொடையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சி பேரணியின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதித லொக்கு பண்டார வைத்திருந்த துப்பாக்கியை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

நுகேகொடை பொலிஸ் குற்றப்பிரிவு அந்த ஆயுதத்தைக் கைப்பற்றி அதன் பயன்பாட்டின் சட்டபூர்வமான தன்மை குறித்து விசாரித்து வருகிறது.

உதித லொக்குபண்டார முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளராக பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# அரசியல் இலாபத்துக்காக மோதல் வேண்டாம் - சஜித்

(கொழும்பு)

குறுகிய அரசியல் இலாபத்துக்காக இன - மத மோதல்கள் உருவாவதைத் தடுக்க வேண்டும்.

அத்துடன், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

அமரபுர மகா பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் ஜனநாயகத்தை நடைமுறையில் பலப்படுத்துவதும், இன - மத நல்லிணக்கத்தை வளர்ப்பதும் அனைவரின் பொறுப்பென குறிப்பிட்ட அவர் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பிடத்துடன், பிற மதங்களுக்கும் உரிய பாதுகாப்பும் மரியாதையும் கிடைத்தால், தேசிய ஒற்றுமை மேலும் வலுவாகும் எனவும் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி-பா-24 1/2
1இல்செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc,MSc, Engineer
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16233

பிறப்பு: 1996 - இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
4இல்சூரிசெவ்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L, Staff (pvt)
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16234

பிறப்பு:1993 - RC
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BBM,Executive Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16238

பிறப்பு :1992 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: சிற்பவேலை
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16240

பிறப்பு:1993 -இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
4இல்சூரிசெவ்
கி.பா: 18 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்-A/L, France
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: B/16241

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc, MSc, Chemist
எதிர்பார்ப்பு: Engineer, Lecturer
தொ.இ: G/16239

பிறப்பு -2004 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
1இல்சூரிசெவ்
கி.பா: 63
உயரம்: 5"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16245

பிறப்பு - 2001 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கிபா- 13 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16251

பிறப்பு -1991 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'6"
கி-பா-51 3/4
தகைமை/தொழில்- BCom, Executive (pvt)
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16253

பிறப்பு-2002 - இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
7இல்சூரிசெவ்
கி.பா-36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in English
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16257

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 491



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அதுவாகி விடுங்கள்!

ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார். (பொக்கோஜு) அவர் அவர் பாட்டுக்கு இருந்தார்.

அவரைத் தேடிக்கொண்டு சில பேர் போனார்கள்!

"என்ன சுவாமி. எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"அப்படி என்றால் என்ன அர்த்தம். உங்கள் கொள்கை என்ன?" என்று கேட்டார்கள்.

"என் கொள்கை இதுதான். பசி எடுத்தால் சாப்பிடுவது. தூக்கம் வந்தால் தூங்குவது அவ்வளவு தான் என்றார்.

ஞானி இப்படி சொன்னதும். கேள்வி கேட்டவர்களுக்கு ஆச்சரியமாய்ப் போனது! அத்தோடு சந்தேகம் வேறு.

"என்ன இது - இவர் எவ்வளவு பெரிய ஞானி. அவர் போய் இவ்வளவு சாதாரணமாக சொல்கின்றாரே.

இவர் உண்மையாகத்தான் இப்படிச் சொல்கின்றாரா அல்லது எதையாவது மூடி மறைக்கிறாரா? ஒன்றும் புரியவில்லையே" என்று யோசித்தார்கள்.

அதனாலே மறுபடியும் கேட்டார்கள்.

"என்ன சுவாமி இது. இப்படிச் சொல்கிறீர்களே. பசி எடுத்தால் சாப்பிடுவேன் - தூக்கம் வந்தால் தூங்குவேன் என்று சொல்கிறீர்களே! நீங்கள் செய்கின்ற காரியங்களிலே எந்தத் தனித்தன்மையும் இருக்கின்றதாகத் தெரியவில்லையே? என்றார்கள்.

"ஆமாம். எந்தத் தனித்தன்மையும் கிடையாது. அதுதான் முக்கியம்!" என்றார் அவர்.

கேள்வி கேட்டவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை அதனாலே மறுபடியும் கேட்டார்கள்!

"என்ன இது பசித்தால் சாப்பிடுவது. தூக்கம் வந்தால் தூங்குவது, இதை எல்லோரும் தானே செய்கிறார்கள்" என்றார்கள்.

இதைக் கேட்டதும் ஞானி சிரித்தார்.

"எல்லாரும்தான் தூங்குகிறார்கள் சாப்பிடுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். உண்மைதான். நானும் அதைத்தான் செய்கிறேன். இருந்தாலும் எனக்கும் அவர்களுக்கும் வேறுபாடு உண்டு.

நீங்கள் சாப்பிடும்போது உங்கள் மனது சாப்பிட்டுக் கொண்டு இருக்காது! நடந்த விடயத்தையோ நடக்கப் போகும் விடயத்தையோ நினைத்துக்கொண்டிருக்கும்.

உங்கள் மனது அங்கேயும் இங்கேயும் அலைபாய்ந்து கொண்டு சாப்பிடுவீர்கள். இல்லை என்றால் ஏதாவது கனவு கண்டுகொண்டிருப்பீர்கள் நான் அப்படி இல்லை.

நீங்கள் சாப்பிடும்போது நீங்கள் அங்கே இருப்பதில்லை நான் சாப்பிடும்போது நான் அங்கே இருக்கிறேன் தூங்கும்போது நீங்கள் தூக்கத்திலே இல்லை. கவலை சிந்தனை குழப்பம் கனவு இப்படி எங்கேயாவது அலைகிறீர்கள்!

நான் அப்படி இல்லை. தூக்கம் என்றால் தூங்குகிறேன் அவ்வளவுதான்,

எதைச் செய்கிறேனோ நான் அதுவாகிவிடுறேன். அது என் இயல்பு. சாப்பிடும்போது நான் சாப்பாடாகி விடுகிறேன் தூங்கும் போது நான் தூக்கமாகி விடுகிறேன். இதுதான் மற்றவர்களுக்கும் எனக்கும் வித்தியாசம்! என்றார் அந்த ஞானி!

"செய்வதை சரியாகச் செய்வதே யோகம்" என்று சொல்வது கீதை.

நாம் செய்கின்ற தொழிலிலே நாம் ஒன்றிப் போய் விடும்போது அது தியானம் ஆகிவிடுகிறது! செய்யப்படுவதும் முழுமையாக அமைந்து விடுகிறது. அதுமட்டுமில்லை. செய்கின்ற தொழிலின் சுமை துன்பம் எதுவுமே இல்லாமல் போய்விடுகிறது!

இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு எனக்கு வேண்டப்பட்ட நாடக நடிகர் ஒருவர் சொன்னார்.

"நீங்கள் சொல்வது மாதிரிதான் சார். நான் எதைச் செய்கின்றேனோ அதுவாகிவிடுவது என் வழக்கம். நான் எந்த வேஷம் போட்டுக்கொண்டு மேடையிலே வந்து நின்றாலும் ரசிகர்கள் கைத்தட்ட ஆரம்பித்துவிடுவார்கள் நிறுத்தவே மாட்டார்கள்" என்றார்

"அது எப்படி?" என்றேன் ஆச்சரியமாக!

"ஆரம்பத்திலேயே நான் சொல்லிவிடுவேன் சார்.

"நீங்கள் கைத்தட்டலை நிறுத்தினால் நான் நடிக்க ஆரம்பித்துவிடுவேன்! என்று. அதைக் கேட்டவுடனே அவர்கள் நிறுத்தாமல் கைதட்ட ஆரம்பித்துவிடுவார்கள் சார்! என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உயிர் நீத்த தங்கள் பிள்ளைகளை நினைவு கூர கிழக்கு மாகாணத்தில் இருந்து வருகை தந்த உறவுகள் தருமபுரம் பகுதியில் நேற்றையதினம் மதிப்பளிக்கப்பட்டனர்.
(தேவானந்தன்)

# வழிபாடு

வழிபாடு என்பது முன்னோர் வழி நின்று செயற்படும் மரபாகும். வழி என்பது நாம் நடந்து செல்லும் "வழி". "பாடு" என்பது தொழிற்பெயர் விகுதி. இவ்விரு சொற்களும் இணைந்த வடிவமே "வழிபாடு" ஆகும்.

எனவே வழிபாடு என்பது ஒரு தொழிற் பெயராகும் இப்பெயர்ச் சொல் வழிபாட்டு நடைமுறைகளைச் சுட்டி நிற்கிறது. நமது முன்னோர்களின் வாழ்வியலில் வழிபாடு நன்கு இணைந்திருந்தது இயற்கையைப் பணிந்து வாழும் நிலையில் இயற்கையை வழிபட்ட மரபு காணப்படுகிறது. பெருமரம், நீர்நிலை, பெருமலை, பெருங்கடல், பெருங்காற்று, பெருமழை, பெருநெருப்பு என்பவை மனித வலுவுக்கு விஞ்சிய ஆற்றலுள்ளனவாக இருந்தமையால் அவற்றை வழிபட்டு வாழும் மரபு தோன்றியது.

பருவநிலைக்கேற்ப இயற்கை செயற்படுவதைக் கண்ட மனிதன் அவற்றையெல்லாம் இயக்கவதற்குப் பேராற்றல் ஒன்று இருக்க வேண்டும் என எண்ணினான். எல்லா வற்றையும் கடந்து நிற்கும் அப்பேராறறலைக் "கடவுள்" எனப் பெயரிட்டு வழிபாடு செய்தான். இந்த வழிபாடு மனித வாழ்வியலின் தொடக்க வழிபாடாக வையகமெங்குமே பரந்தி ருந்தது. ஆனால் சிறப்பாகத் தமிழ் இலக்கியங்கள் அவ் வழிபாட்டு மரபுகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. இயற்கையால் பெறும் நன்மை யையும் தீமையையும் பகுத்து அறியக்கூடிய மனப்பக்குவம் அவர்களிடம் இருந்தது.

குறிப்பாக விளைபொருள் வளம் வேண்டியும், நோய், பிணியிலிருந்து விடுபடவும் வழிபாடு செய்யும் மரபு அன்று தொட்டு இன்றுவரை தொடர்கிறது. இயற்கையால் அழிவு ஏற்படும் போது இயற்கையை வழிபட்டு அத் துன்பநிலையினருந்து விடுபட்டனர்.

இத்தகைய வழிபாடு குடும்பநிலையிலே நடைபெற்றமைக்கும் பெண்கள் சிறப்பாக இவ்வழிபாட்டு நடைமுறைகளைச் செயற்படுத்தியதற்கும் இலக்கியப் பதிவுகள் சான்றாக உள்ளன. மடையிட்டு வழிபாடு செய்யும் மரபும் தமிழரிடை இருந்தது . விளைவால் பெற்ற தானியங்களையும் கிழங்கு வகைகளையும் படிவகைகளையும் பெருமரத்தின் அடியிலே மடை பரவி விளக்கேற்றி வழிபாடு செய்வர். வழிபாட்டிலே விளக்கேற்றல் ஒரு சிறப்பு நடைமுறையாக இருந்தது. அவற்றோடு இயற்கையின் கொடையாகக் கிடைக்கும் மலர்களையும் மடையிட்டு வழிபட்டனர். மலர்களால் மாலை கட்டி, வழிபாடு செய்யும் இடத்தை அழகு செய்தனர். வாழை, கமுகு,தென்னம் பாளை, மாவிலை, தோரணம் என்பவற்றை நாட்டி வழிபாட்டிடத்தை வரையறை செய்தனர். இத்துடன் பசும்பால், நெய், தயிர், தேன், இளநீர் என்பவற்றையும் மடைப் பொருளாகப் பரவி வைத்து வழிபாடு செய்தனர்.

இவை யாவும் வழிபாட்டிற்குரிய மடைப் பொருட்களாக இன்றுவரையும் பயன்படுத்தப்படுகின்றன. பருவகால மாற்றத்திற்கேற்ப விளை பொருட்கள் கிடைத்தன. அரிசி விளைபொருளாக நெற்செய்கையால் கிடைத்த போது பொங்கலும் மடை பொருளாகியது. எனினும் உழு ந்து, பயறு, திணை போன்ற தானியங்களும் தொடர்ந்து வழிபாட்டிலே வடை, மோதகம், கொழுக்கட்டை, மாவிளக்கு எனப்பல மடைப்பொருட்களாக வைத்து வழிபடப்பட்டன.

வழிபாட்டில் மடைப் பொருட்களோடு கடவுளைப் பாடி வழிபடும் நிலையில் பல பாடல்கள் தோன்றின. தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற இனிய இசைப் பாடல்களும் இணைந்து கொண்டன. மேலும் இவ்விசைப் பாடல்களுக்கு அணிசெய்ய இசைக் கருவிகளும் தோன்றின. தண்ணுமை, குழல், யாழ், தாளம், வீணை போன்ற கருவிகள் இசைக்கப்பட்டன. உருவ வழிபாடு தோன்றிய போது இயற்கைத் தெய்வங்களுக்கு உருவங்கள் கல்லிலே சமைக்கப்பட்டன. வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இவற்றை உள்ளடக்கிய வழிபாட்டிடமாகக் கோயில் என்ற அமைப்பும் பின்னர் தோன்றியது.

முதலிலே பாறைகளைக் குடைந்தே கோயில்கள் அமைக்கப்பட்டன. பின்னர் கருங்கற்களாலும் வெண்சுதைக் கட்டிகளாலும் மரத்தாலும் கோயில்கள் கட்டப்பட்டன. அவை இன்றுவரை நிலைபெற்றுக் கோயில் வழிபாடு தொடர்கிறது.

தூய்மை, கொடை, பணிவு, இன்சொல், கூட்டுப் பணி, தொண்டுப்பணி, கல்விப்பயிற்சி, பண்பாட்டுப் பயிற்சி, மருத்துவம் போன்ற பல்வேறு மனித விழுமியங்களைப் பயிற்றும் களங்களாகக் கோயில்கள் விளங்கின. மக்கள் குறை தீர்க்கும் அறங்காவல் நிலையமாக அவை தொழிற்பட்டதால் வழிபடு தெய்வம் எம்மை என்றும் காக்கும் என்ற நம்பிக்கை தமிழரிடையே நிலை பெற்றது.

**வெள்ளி நற்சிந்தனை 15**




முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

28.11.2025,
கார்த்திகை12 , வெள்ளிக்கிழமை
அட்டமி முன்னிரவு 7.16 மணிவரை
சதயம் முன்னிரவு 10.42 மணிவரை
சுபநேரம் 6.13- 7.43 மணிவரை
இராகுகாலம் 10.43-12.13 மணிவரை .
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்.

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத பிரமுகர் ஒருவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.




மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.




எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கல்யானக் கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கனவுப் பலிதமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கூடும், சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.




கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குசெய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்ய முற்படுவீர்கள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள்.




உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

**காலத்தை தள்ளிப் போடாதே காமதகங்கள் அபாயகரமானவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 920





"சுவாமி! ரொம்பவும் கருணை கூர்ந்து எனக்கு இந்த வரத்தைக் கொடுங்கள். அருள்மொழி வந்து சேருகிற வரையில் அவர் இந்த அரண்மனையில் இருப்பதற்கு அனுமதி அளியுங்கள்!" என்று சக்கரவர்த்தினி உருக்கமான குரலில் கேட்டு விட்டு சுந்தர சோழரின் பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள்.

"முதன்மந்திரி! கேட்டீரா? வெளுத்ததெல்லாம் பால் என்று கருதும் மலையமான் மகளின் கோரிக்கையைக் கேட்டீரா? கடவுளே! இப்படியும் ஒரு கபடமற்ற சாது உலகத்தில் இருக்க முடியுமா? இவள் என்னிடம் எதுவுமே கோருவதில்லை. போயும் போயும் இப்படிப்பட்ட வரத்தைக் கேட்கிறாள். அதை மறுக்க மனம் வரவில்லை. ஆனால் அந்த ஊமைப் பைத்தியக்காரி இங்கே இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு நரக வேதனையாக இருக்கும். ஆகையால், நாகையிலிருந்து இளவரசனை அழைத்துவர உடனே ஏற்பாடு செய்யுங்கள்!"

"அப்படியே செய்கிறேன் ஐயா! யானைப் படைகளும் குதிரைப் படைகளும் அனுப்பிப் பகிரங்கமாக இளவரசரை அழைத்து வரச் செய்யலாமா? அல்லது"

"மாறு வேடம் பூணச் செய்து இரகசியமாக அழைத்து வரலாமா, என்றுதானே கேட்கிறீர்? பகிரங்கமாக இளவரசன் வந்தால் சோழ நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும் என்று எண்ணுகிறீர்கள் அல்லவா?"

"நான் எண்ணுவது மட்டும் அல்ல, பிரபு! நிச்சயமாக அறிந்திருக்கிறேன். மக்கள் பல காரணங்களினால் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு வியாஜம் ஏற்பட வேண்டியதுதான் உடனே மக்களின் உள்ளக் கொதிப்பு வெளியே பீறிக் கொண்டு வரும். பழுவேட்டரையர்களும் மதுராந்தகத் தேவரும் என்ன கதி அடைவார்கள் என்று சொல்ல முடியாது"

"இது என்ன பேச்சு, முதன் மந்திரி! குடிமக்கள் அப்படி மூர்க்கத்தனமாக நடந்து கொண்டால், சோழ நாட்டு வீர சைன்யங்கள் எங்கே போயின?"

"சைன்யங்களிடையேதான் கொதிப்பு அதிகம், பிரபு! மக்களாவது வெறுங் கூச்சல் குழப்பத்துடன் அடங்கி விடுவார்கள். சேனா வீரர்களோ, தஞ்சைக் கோட்டையை சின்னா பின்னமாக்கி, பழுவேட்டரையர்களையும் மதுராந்தகத் தேவரையும் சிறையில் அடைத்துவிட்டு, ஈழங் கொண்ட வீராதி வீரராகிய அருள்மொழிவர்மரைச் சிங்காதனத்தில் ஏற்றிவிட்டே மறுகாரியம் பார்ப்பார்கள்"

"அப்படி நடக்க வேண்டுமென்று நீங்களும் மனத்திற்குள் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். முட்டாள் ஜோதிடர்கள் கட்டி விட்ட கதைகளை நம்பிக் கொண்டு குடிமக்களும் புத்தி தடுமாறி அலைகிறார்கள்.

ஆனால் உங்கள் மனத்தில் ஒன்று நிச்சயமாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். என் பெரிய பாட்டனார் கண்ட ராதித்த அடிகளின் குமாரன் மதுராந்தகனே இந்தச் சோழ சிம்மாசனத்துக்கு உரிமை உடையவன். அவனுக்கே பட்டம் கட்டி வைப்பதென்று தீர்மானித்து விட்டேன். மக்கள் அதற்குத் தடை சொன்னாலும் சரி, தேவர்களும் மூவர்களும் வந்து தடுத்தாலும் சரி, நான் கேட்கப் போவதில்லை.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## அன்பு வழியே சிறந்தது



(26.11.2025 அன்றைய தொடர்ச்சி)

இத்தகைய மரண பயத்திலிருந்து தெளிவடையக் கூடிய வழியைக் காட்டும் புத்த மதக்கொள்கைகள் எத்தகைய சிறப்பு உடையவை என்பதை எண்ணிப் பார்! புத்த மதத்தில் நம்பிக்கை கொண்டு முக்தி அடைய வழிபடுவாயாக!" என்றான்.

"அரசே! நான் குற்றம் நீங்கியவனாகி விட்டேன். வீடுபேறு அடைவதில் எனக்கு ஆவல் உண்டாகிறது, அதைப் பற்றி அறிவுரை அருள வேண்டிக் கொள்கிறேன்" என்று வேண்டிக் கொண்டான் இரத்தினம்.

அதைக் கேட்டதும் அரசன் புன்முறுவலுடன், ஒரு சட்டி நிறைய எண்ணெய் கொண்டு வந்து இரத்தினத்திடம் கொடுக்கும் படி உத்தரவிட்டான்.

"இரத்தினா! இதோ உன் கையில் உள்ள சட்டியின் விளிம்பு வரையில், எண்ணெய் உள்ளது. அதைக் கையில் ஏந்தியபடியே, இந்த நகரத்தைச் சுற்றி வரவேண்டும். ஒரு துளிகூட கீழே சிந்தக் கூடாது. சிந்தினால், வாள் ஏந்தி உன்னுடன் வருகின்ற சிப்பாய்கள் அந்த இடத்திலேயே, உன்னைக் கொன்று விடுவார்கள்" என கட்டளையிட்டான் அரசன்.

உருவிய வாளுடன் சிப்பாய்கள் பின் தொடர்ந்து வர, இரத்தினம் மிகவும் கவனத்தோடு எண்ணெய்ச் சட்டியை ஏந்தி, ஒரு துளி எண்ணெய் கூட சிந்தாமல், நகரம் முழுவதையும் சுற்றி வந்து, அரசன் முன் நின்றான். "இரத்தினா! நகரத்தைச் சுற்றி வந்ததில், ஏதேனும் சிறப்பைக் கண்டாயா?" என்று கேட்டான் அரசன். "அரசே! எண்ணெய் சிந்தி விடக் கூடாதே என்ற கவனத்தில், சிந்தினால் உயிர் போய் விடுமே என்ற அச்சத்தினால், எந்தப் பகுதி யிலும், என் கண்களுக்கு எதுவுமே தென்படவில்லை. மனதை எதுவும் கவரவும் இல்லை" என்றான் அவன்.

"இப்பொழுது தெரிந்து கொண்டாயா? ஒரே உறுதியான எண்ணத்தால் அருகில் உள்ளவற்றை நீ மறந்தாயே. அந்த ஒரு எண்ணமே தியானம் என்பது. அத்தகைய சிந்தனை சிதறாத தியானத்தில் இருப்பவன் உலக ஆசைகளிலும் பந்தங்களிலும் மீண்டும் சிக்கிக் கொள்வதில்லை." என்றான் அரசன்.

அறிவுரையும், அறவுரையும் உணர்த்திய அரசனின் அன்பு வழியைக் கேட்ட இரத்தினம், அருள்வழி எது என்பதை தெரிந்து கொண்டான். மகனின் அருள்வழி நோக்கை அறிந்து மகிழ்ச்சி அடைந்தான் விசாகன். இக் கதை சிறுவர் சிறுமியர்க்கு சற்று கடினமாக இருக்கலாம். என்றாலும், இப்பொழுதே தெரிந்து கொள்வது நல்லதுதானே.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் முயற்சி என்ற ஒன்றை மட்டும் கையில் எடுத்து விட்டால் அவரால் செய்ய முடியாதது என்று ஒன்றுமில்லை. *~ அலெக்சான்டர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீர்வு எனும் ஜோதி கிடைத்தால் அதில் கலக்க நாம் தயாரா?

தனிநாடு, சமஷ்டி, மாகாண சபை என்ற சொற்பதங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முன்வைக்கப்படுபவை.

உண்மையில் தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதாக இருந்தால், அதற்கான ஒரே தீர்வு தனிநாடாக மட்டுமே இருக்க முடியும்.

எனினும் சமகால சூழ்நிலையில் நாடு பிரிபடுவதை நாட்டின் பெரும்பான்மை இனம் உட்பட சர்வதேச சமூகம் வரை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இங்குதான் ஒரே நாடு என்ற எல்லைக்குள் நம் தமிழினம் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கான தீர்வு என்ன? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைமை உள்ளது.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுவாகவே இருக்க வேண்டும் என முன்மொழிவதற்கல்ல.

மாறாக, இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று நமக்குக் கிடைக்கும்போது அதனை ஏற்றுக் கொள்வதற்கும் அதனை மையப்படுத்தி எங்களைக் கட்டமைத்துக் கொள்வதற்குமான தகைமையுடன் – இயலுமையுடன் நாங்கள் இருக்கின்றோமா? எனச் சுயபரிசோதனை செய்வது இங்கு அதிமுக்கியமாகிறது.

உண்மை. வடக்கு மாகாண சபை எங்கள் கைகளில் கிடைத்தபோது அதனை நாங்கள் எப்படி நடத்தினோம். வடக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு நாம் எங்கள் மண்ணில் ஏற்படுத்திய முதலீட்டுத் திட்டங்கள் எத்தனை? அபிவிருத்திப் பணிகள் எத்தனை? எனக் கணக்கிட்டால் இருந்ததையும் இழந்த கதைதான் மிஞ்சும்.

ஆக, இதற்கு அடிப்படைக் காரணம் நாம் வாய்ச்சொல்லில் வீரர்களேயன்றி, செயல்வீரர்கள் அல்ல.

உண்மை. வடக்கு மாகாண சபை செய்த உருப்படியான வேலைத்திட்டம் என்று கூறுவதற்கு எங்களிடம் எதுவுமில்லை எனும்போது, எங்களுக்கான தீர்வு எங்கள் கைகளில் கிடைக்கும்போது அதனை ஏற்று நடத்துவதற்கு நாம் எங்களைத் தயார்படுத்தியுள்ளோமா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதிலாகும்.

ஆம், தீர்வுபற்றிப் பேசுகின்ற நாம்; கிடைக்கின்ற தீர்வை ஏற்று அதிலுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, எங்களை நாங்களே கட்டமைக்கின்ற ஆளுமையைக் கொண்டிருக்காவிடில் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

எனினும் எங்கள் அரசியல் தலைமைகள் அதுபற்றி இன்னமும் சிந்திக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரை காலத்துக்காலம் வருகின்ற தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றியைத் தமதாக்கினால் போதும் என்பது தான்.

இங்கு தேர்தலில் நிறுத்தப்படுகின்ற வேட்பாளர்கள் யாவர்? அவர்களின் தகைமை என்ன? என்பதும் பார்க்கப்படுவதில்லை.

உருப்படிக்கு ஒன்று என்பதாக இருந்தால் அதுபோதும் என்று நினைக்கின்ற அளவில் இருக்கக்கூடிய எங்கள் அரசியலால் எதுவும் செய்ய முடியாது.

ஆகையால் தயவுசெய்து தீர்வு கிடைக்கும் வரை காத்திருக்காமல் தீர்வுக்கான வழிமுறைகள் நம் கைகளில் கிடைக்கும்போது, அதனைத் தக்கமுறையில் பயன்படுத்தி எங்களை நாங்கள் உயர்த்தும்போதுதான் உலகநாடுகள் எங்கள் கோரிக்கைகளை உற்றுநோக்கும்.

இல்லையேல் தமிழர்களுக்கு எதைக் கொடுத்தாலும் அவர்கள் போட்டுடைப்பார்கள். அவர்கள் எதையும் எதிர்ப்பார்களேயன்றி எதையும் உருவாக்கமாட்டார்கள் என்ற மனநிலைக்கு சர்வதேச சமூகம் வந்துவிடும் கவனம்.

### யாழில் சீரற்ற காலநிலையால்

## 231 குடும்பங்களை சேர்ந்த 746 பேர் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 231 குடும்பங்களைச் சேர்ந்த 746 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தினுடைய அனர்த்த நிலவரம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் நிலவர அறிக்கையில் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 231 குடும்பங்களைச் சேர்ந்த 746 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் யா/போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 9 அங்கத்தவர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வீடொன்று முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதெனவும் அதேவேளை அரியாலை உவர் நீர் தடுப்பணையில் 30 கதவுகளும் தொண்டைமானாறு உவர்நீர் தடுப்பணையின் 10 கதவுகளும் அராலி உவர் நீர் தடுப்பணையில் முழுமையாக 10 கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதுடன் தேவைக்கேற்ற வகையில் கதவுகள் திறப்பதற்குரிய தயார் நிலையில் நீர்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவு பிரதேசத்தில் மாவலித்துறை வீதி பொதுப் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதவாறு முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. (ம-7,33)

## சீரற்ற காலநிலையால் இடிந்து விழுந்த பெந்தோட்டை பாலம்

(களனி)

சீரற்ற வானிலையின் தாக்கத்தால் 1902ஆம் ஆண்டு கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பெந்தோட்டை பழைய பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.

தீவிரமான மழைப் பொழிவு, பலத்த காற்று மற்றும் ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்ததன் விளைவாக, இந்த பழமையான பாலத்தின் பகுதி சரிந்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுமார் 123 ஆண்டுகளாக பெந்தோட்டை பகுதியை இணைத்து வந்த இந்த பாலம், இலங்கையின் முக் கிய வரலாற்று பொக்கிஷங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

காலநிலை மேலும் மோசமடையக் கூடும் என்பதால், குறித்த பகுதிக்கு பொது மக்கள் செல்ல வேண்டாம் எனவும் போக்குவரத்து மாற்றுப் பாதைகளுக்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு பணிகள் மற்றும் மதிப்பீடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (நி)

## திருவள்ளுவர் மகாசபையின் 76 ஆவது மகாநாடும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 76 ஆவது மகாநாடும் பொதுக்கூட்டமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன்கோவில் மண்டபத்தில் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை பொதுச் செயலாளர் க.சண்டேஸ்வரராஜாவின் ஒழுங்கமைப்பில் இடம் பெறவுள்ளது.

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை தலைவர் ச.சாம்சிவம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி மார்க்கண்டன் ருபவதனன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

## மின்தடை சீரமைப்பு பணிகள் முன்னெடுப்பு

சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல மின் தடைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின் தடைகள் மற்றும் சிக்கல்கள் குறித்து இலங்கை மின்சார சபையின் மொபைல் செயலியைப் பயன்படுத்தி பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மின்விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (நி)

## மோசமான வானிலையால் ரயில் சேவை ஸ்தம்பிப்பு

சீரற்ற வானிலை காரணமாக அனைத்து ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் கரையோர ரயில் பாதை மற்றும் களனி ரயில் பாதையின் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெல்லவ பகுதியிலிருந்து வடக்கு ரயில் பாதை நீரில் மூழ்கியுள்ளது.


இதனால் அந்தப் பாதையிலும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் புத்தளம் பாதை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மோசமான வானிலை காரணமாக, கொழும்பு கோட்டைக்கும் பதுளைக்கும் இடையிலான மலையக ரயில் பாதையில் இயங்கும் அனைத்து ரயில்களும் மறு அறிவிப்பு வரும் வரை நானுஓயா வரை மட்டுமே இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே துறை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

JSAC
பாதுகாப்பான இணையம் என்பது
ஒரு கனவு அல்ல, நாம் அனைவரும் ஒன்றிணையும்
பொழுது அது நிஜமாகும்.
16
2025

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025
“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில்
அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும்
குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”
[illegible] (அமெரிக்க அரசியலாளர்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

11

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**எஸ்.மி பெரேரா ஹொரணை தொகுதி**

ஹொரணை தொகுதியில் குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிட்ட எஸ்.மி பெரேரா (பாராளுமன்ற உறுப்பினர் வில்மட் ஏ. பெரேராவின் மனைவி) (பெற்ற வாக்குகள் 5,145) தோல்வியடைந்தார். யானைச் சின்னத்தில் போட்டியிட்ட எம்.டி. எச். ஜயவர்தன (பெற்ற வாக்குகள் 21,746) வெற்றி பெற்றார்.

**திருமதி டோனா கெரோலின் குணவர்தன தம்பதெனியா தொகுதி**

தம்பதெனியா தொகுதியில் போட்டியிட்ட திருமதி டோனா கெரோலின் குணவர்தன 2,874 வாக்குகளைப்பெற்று ஆர். ஜி.சேனநாயக்காவிடம் (பெற்ற வாக்குகள் 20,003) தோல்வியடைந்தார். டோனா கெரோலின் குணவர்தன லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்தனவின் சகோதரியாவார்.

**தமரா குமாரி இலங்கரத்ன கண்டி தொகுதி**

கண்டி தொகுதியில் போட்டியிட்ட தமரா குமாரி இலங்கரத்ன 7644 வாக்குகள் பெற்ற போதும் 3705 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

**சீதா குமாரி வல்கம்பாய கலஹா தொகுதி**

கலஹா தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட சீதா குமாரி வல்கம்பாய 596 வாக்குகளை மட்டும் பெற்று தோல்வியடைந்தார்.

**என்.எச்.சீலவத்தி மாவனல்ல தொகுதி**

மாவனல்ல தொகுதியில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் என்.எச்.சீலவத்தி 739 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

**திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க கிரியெல்ல தொகுதி**

முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த புளோரன்ஸ் சேனநாயக்க கிரிஎல்ல தொகுதியில் தோல்வியடைந்தார்.

இத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களை கட்சி ரீதியாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-2, லங்கா சமசமாஜகட்சி-2, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி-1, விப்லவகாரி சமசமாஜகட்சி-2, குடியரசுக் கட்சி-1, தொழிற்கட்சி-1, ஐக்கிய தேசிய கட்சி- 1, சுயேட்சை வேட்பாளர்கள் - 2, எவ்வாறாயினும் இத் தேர்தலில் இரு பெண்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான குசுமாசிறி குணவர்தன (பிலிப் குணவர்தன வின் மனைவி) முன்னைய பாராளுமன்றத்திலும் அங்கத்துவம் வகித்தவர்.

**செனற்சபை பெண் உறுப்பினர் க்ளோடா ஜயசூரிய -1953**

சட்டத்தரணியும் உச்ச நீதிமன்ற நீதிபதியுமான ஜோன் அட்ரியன் புனித வாலண்டைன் ஜெயவர்த்தனாவின் (1877-1927) ஒரே பிள்ளை க்ளோடாக் ஜெயவர்த்தன ஆவர்.

1945 ஆம் ஆண்டு இலங்கை அரச சபையின் உறுப்பினரான (1943-1947) பெர்னாட் ஜெயசூர்யாவை மணந்தார். இவர் 1947 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற 1 ஆவது பாராளுமன்றத் தேர்தலில் அவிசாவளை தொகுதியில் போட்டியிட்டு பிலிப் குணவர்தனவிடம் தோல்வியடைந்தார்.

பெர்னார்ட்டின் மரணத்தைத் தொடர்ந்து கோல்டாக் உள்ளூர் அரசியலில் நுழைந்து ஹன்வெல்ல கிராம சபையின் தலைவராக ஆனார். 1952 இல் 2ஆவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக அவிசாவளை தொகுதியில் போட்டியிட்ட அவர், குணவர்தனவின் மனைவி குசுமசிறியிடம் 929 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

ஜெயசூரிய அக்டோபர் 1953 இல் இலங்கையின் செனட்சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்காக தனது செனட்டர் தனது பதவியை 1956இல் ராஜினாமா செய்தார். ஜனவரி 1956 இல், அவருக்கு பிரிட்டிஷ் எம்பயர் (MBE) உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. ஜெயசூர்யா 1956 ஆம் ஆண்டு அவிசாவளை பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார், அங்கு அவர் பிலிப் குணவர்தனவிடம் 22,252 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

**மூன்றாம் பாராளுமன்றத் தேர்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் -1956**

1956ஆம் ஆண்டுத் தேர்தலில், 5 பெண்கள் போட்டியிட்டதுடன், அவர்களில் மூவர் வெற்றி பெற்றனர். அந்தத் தேர்தலில், கொழும்பு வடக்கு தொகுதியில் லங்கா சமசமாஜக்கட்சியில் போட்டியிட்ட விவியன் குணவர்தன, மீரிகமையில் மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியில் போட்டியிட்ட விமலா விஜயவர்தன மற்றும் கிரியெல்லயில் மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியில் போட்டியிட்ட குசுமா குணவர்தன ஆகியோரே, இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற பெண்களாவர். பெண்ணொருவர் அமைச்சுப் பதவியொன்றைப் பெற்ற வரலாறு, இந்தத் தேர்தலிலேயே இடம் பெற்றது. மீரிகம தொகுதியில் வெற்றிபெற்ற விமலா விஜயவர்தன, இலங்கையின் முதலாவது சுகாதார அமைச்சராகினார்.

மூன்றாவது பாராளுமன்றக் காலக்கட்டத்தில் மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், பிலிப் குணவர்தன - குசுமா குணவர்தன, லெஸ்லி குணவர்தன - விவியன் குணவர்தன ஆகிய இரு எம்.பி தம்பதிகள் போட்டியின் மூலம் பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1956ஆம் ஆண்டுத் தேர்தலில், வெலிமடை தொகுதிக்குத் தெரிவான கே. எம்.பி. ராஜரத்னவின் ஆசனம், தேர்தல் மனுவொன்றின் மூலம் இழக்கப்பட்டதை அடுத்து, அங்கு இடம்பெற்ற இடைக்காலத் தேர்தலில், அவரது மனைவியான குசுமா ராஜரத்ன மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்,

இத் தேர்தலிலும் வழங்கப்பட்ட சின்னங்கள் அபேட்சகர்களுக்கே ஒழிய கட்சிகளுக்கல்ல. அபேட்சகர்களுக்கு சின்னங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் இத் தேர்தலில் பொதுவாக ஒரே சின்னத்தை தெரிவு செய்து பாவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**விமலா விஜயவர்தன - (MP 1956-1959)**

1952 இல், 2ஆவது பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி களனி தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர் அவரது மருமகனும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தன. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் 6,235 வாக்குகளால் தோல்வியடைந்தார். 1956 இல் நடந்த 3ஆவது பாராளுமன்றத் தேர்தலில், அவர் மீரிகம தொகுதியில் போட்டியிட்டு, 36,193 வாக்குகளைப் (மொத்த வாக்குகளில் 75.25%) பெற்று, ஜோன் அமரதுங்கவை தோற்கடித்து தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஜூன் 1956 இல், அவர் S. W. R. D. பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். நாட்டின் முதல் பெண் அமைச்சரவை அமைச்சரானார். அப்போதைய ஆண் ஆதிக்கம் செலுத்திய சுகாதார அமைப்பில் அவர் பல மாற்றங்களைச் செய்தார். அவர் நியமனம் செய்யப்பட்ட நேரத்தில், பெண் மருத்துவர்கள் மருத்துவமனை வார்டுகளுக்குப் பொறுப்பாக இருக்க அனுமதிக்கப்படவில்லை. மூத்த மருத்துவர்களுக்கு வார்டுகளைக் கண்காணிக்கும் உரிமையை அளிக்கும் முறையை மாற்றினார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைநிறுத்தப்...

சீரற்ற வானிலை மற்றும் அனர்த்த நிலைமை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நேற்றும் (நவம்பர் 27) இன்று (நவம்பர் 28) நடைபெறவுள்ள பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

குறித்த நாட்களில் நடைபெறவிருந்த பரீட்சைகள் டிசம்பர் 8ஆம், 9ஆம் திககளில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

## அனர்த்தங்...

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாயின்னை இழப்பீடாக வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)






















## பட்ஜெட்...

மன்றத்தில் பட்ஜெட் குழுநிலை விவாதங்களை நடத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, பாராளுமன்றம் திங்கட்கிழமை மீண்டும் கூட உள்ளது. மேலும் திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு நாட்களிலும் இரவு வரை அமர்வுகள் தொடரும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## அரச ஊழியர்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது. சீரற்ற வானிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அதிதீவிரமான வானிலை மற்றும் அனர்த்த நிலைமைகள் காரணமாக, நாளை (28) முதல் அனைத்துப் பாலர் பாடசாலைகளும் முன் பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் இதனை அறிவித்துள்ளது.

இந்த அனர்த்த நிலைமைகள் தணியும் வரை இந்த அறிவிப்பு அமுலில் இருக்கும் என அந்தச் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## நாடு முழுவதும்...

இலங்கைக்கு தென் கிழக்கே நிலைகொண்டிருந்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளதால், அடுத்த சில நாட்களுக்கு தற்போதைய பலத்த மழையும் கடும் காற்றும் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று (27) பிற்பகல் முழு நாட்டையும் உள்ளடக்கிய விசேட சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள நிலையில், இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ச்சியான மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 200 மி.மீ. இற்கும் அதிகமான மிகவும் பலத்த மழையும் சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மி.மீ. இற்கும் அதிகமான மிகவும் பலத்த மழையும் பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 100 மி.மீ. இற்கும் அதிகமான பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

அத்துடன், நாட்டின் பல பகுதிகளில் மணிக்கு 60-70 கி.மீ. வேகத்தில் வீசும் மிகவும் பலத்த காற்றுடன், அவ்வப்போது மணிக்கு 80 கி.மீ. வரையிலான பலமான திடீர் காற்று வீசக்கூடும்.

பலத்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக ஏற்படும் ஆபத்துகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## மோசமான...

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக 1,729 குடும்பங்களைச் சேர்ந்த 5,893 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவுகளில் 23 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் 5 பேர் காணாமல் போயுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கண்டி, கங்கொடை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சுமார் 21 பேர் காணாமல் போயுள்ளனர்.

மண்சரிவு அபாயம் காரணமாக வீடுகளில் இருந்து பாதுகாப்புக்காக ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது, அந்த வீடு மண்சரிவில் சிக்கியதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களில் மூவரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம்நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவுகள் காரணமாக 6 மரணங்கள் பதிவாகியுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் 10 பிரதேச செயலகப் பிரிவுகளும் மோசமான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதகமான கால நிலை காரணமாக ஏற்படும் எந்தவொரு அவசரகால சூழ்நிலைகளையும் 117 என்ற அவசர தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பேரிடர் மேலாண்மை மையம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (ம-7)

## மாவீ...

இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் ஒரு பதிவினை இட்டுள்ளார்.

குறித்த

பதிவில், "மன உறுதியுடன் போர்க்களத்தில் அணிவகுத்துச் சென்ற வீரமிக்க வீரர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறோம்.

தியாகச் சுடர்களின் நினைவைப் போற்றுவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

போரில் மக்களுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கும், மக்களுக்குமான நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.


இந்நிலையில், குறித்த மாவீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையிலும் மரியாதை செலுத்தும் வகையிலும் அவர் இந்த பதிவை இட்டுள்ளார். (ம-7)

## பாராளுமன்...

அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ச.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் வீட்டுடன் கூடிய காணி (2 பரப்பு) விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம் :

8.00 A.m - 4.30Pm வரை

தொடர்புகளுக்கு :

077 921 8010

(6039)

## மணப்பெண் தேவை

01.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Graduate, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

02.அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

03.கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

04.மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, Computer Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

05.காரைநகர், இந்து, 1988, பரணி, Masters Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

06.இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

07.மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

08.காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, New Zerland + Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

09.குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, MBA Phd Director, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

10.மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(1743)

S.Sharma J.P | www.thaalee.com | 077 539 3728


# அல்வாய் கிழக்கில் எலிக்காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு

அல்வாய் கிழக்கு மாலை சந்தியில் எலிக்காய்ச்சலால் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பிரதீபன் லக்சிகன் (வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

கடந்த 22 ஆம் திகதி சிறுவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டதை தொடர்ந்து தாயார் நாட்டு வைத்தியம் செய்துள்ளார்.

தொடர்ந்து காய்ச்சல் நீடித்ததால் 25ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் குறித்த சிறுவனுக்கு எலிக்காய்ச்சல் என கண்டறியப்பட்டதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையில் எலிக்காய்ச்சலால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60,104)

# வட்டுவாகல் பாலத்தை தவிர்க்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்ட அறிவிப்பில்,

வட்டுவாகல் பாலப் பகுதியில் தற்போது வெள்ளநீர் சில இடத்தில் பாலத்தை மேவிச் செல்கிறது.

இதனால் அந்தப் பகுதியைப் பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானதாக உள்ளது. எனவே வட்டுவாகல் பாலத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப் பாதைக்கு மாற்றீடாக வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீர் உடல்நலக் குறைவால் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூன்று நாட்களுக்கு முன்பு அவருக்கு ஏற்பட்ட மருத்துவ அவசர நிலையைத் தொடர்ந்தே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது உடல்நிலை தற்போது சீராகவும், முன்னேற்றமாகவும் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


# நயினாதீவு - குறிகாட்டுவான் படகு சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக குறிகாட்டுவான் - நயினாதீவு படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் இவ் அறிவித்தலை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம-7)


## 45 ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.10.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் சுப்ரமணியம் மதியோகநாதன்

அவர்களின் 45 ம் நாள் நினைவுதினம் இன்று 28.11.2025 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் "ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில்" (345 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரை நாம் இழந்து தவித்து நின்ற வேளை ஓடோடி வந்து எமக்கு சகல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(1742)

39/28, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P-077 826 8205

இங்ஙனம் : குடும்பத்தினர்

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-4439)

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-

11-16 Kg 2610/-

21-22 Kg 2380/-

குறைந்த விலை -நிறைந்த சேவை

கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்

14 நாட்களில் Delivery

(C-4439)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-

Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.

தொடர்புகளுக்கு :

076 830 3931

(6022)

## மணமகன் தேவை

ஐரோப்பிய மணமகளுக்கு IT, Doctor படித்த மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு :

077 889 4353 (Whatsapp)

0049764752219 (Viber)

00491741789740 (Whatsapp)

(6041)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடி மூளாய் றோட் உடுக்கியவளை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் 7 பரப்பு காணியில் பிரிவிடல் செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் 3 பரப்பு 5 குளி உடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

+61401107584 | 077 248 7024

(6019)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.